# ஜீவ நதி

தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி. 22:1)

MAY 2026



SHARJAH TAMIL CONGREGATION (CSI KANYAKUMARI DIOCESE)

Private circulation only.

ஷார்ஜா தமிழ் திருச்சபை - கன்னியாகுமரி பேராயம்
SHARJAH TAMIL CONGREGATION - KANYAKUMARI DIOCESE

# ஜீவநதி

## மே 2026 - இதழ் 225

**“உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்:**
**உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.”**
**சங்கீதம் 128:2**

SHARJAH TAMIL CONGREGATION
(CSI KANYAKUMARI DIOCESE)
P.O.Box : 46121, Sharjah, U.A.E. Tel. / Fax : 06-5680727, Mobile : 050-9367576

For private circulation only

# அனுதின மன்னா

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17:17)**

| தேதி | நாள் | காலை | மனன வசனம் | அதிகாரம் | மாலை |
|---|---|---|---|---|---|
| 1 | வெள் | ஆதி. 2:8-15 | தேவனாகிய ... வைத்தார் | 2:15 | 2 தெச. 3:6-15 |
| 2 | சனி | 2 தெச. 3:1-13 | சகோதரரே ... போகாமலிருங்கள் | 3:13 | மத். 20:1-16 |
| 3 | ஞா | யோவா. 21:15-18 | மூன்றாந்தரம் ... என்றார் | 21:17 | லூக். 19:1-10 |
| 4 | திங் | எரே. 31:1-5 | பூர்வமுதல் ... கொள்ளுகிறேன் | 31:3 | எபே. 4:1-16 |
| 5 | செவ் | சங். 63 | தேவனே ... வாஞ்சிக்கிறது | 68:1 | நீதி. 24:27-34 |
| 6 | புத | எபே. 3:13-21 | விசுவாசத்தினாலே ... நிலைபெற்றவர்களாகி | 3:17 | மத். 22:34-40 |
| 7 | வியா | மத். 20:25-34 | உங்களுக்குள்ளே ... பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன் | 20:26 | எபே. 4:25-32 |
| 8 | வெள் | ஏசா. 54:1-7 | கைவிடப்பட்டு ... சொல்லுகிறார் | 54:6 | லூக். 18:18-30 |
| 9 | சனி | 1 யோ. 1:1-10 | அவர் ... சுத்திகரிக்கும் | 1:7 | 2 இராஜா. 4:18-37 |
| 10 | ஞா | மத். 28:10-20 | நான் ... ஆமென் | 28:20 | மத். 6: 25-34 |
| 11 | திங் | ஏசா. 14:1-17 | நான் ... என்றும் | 14:13 | மத். 11:28-30 |
| 12 | செவ் | சங். 110 | கர்த்தர் ... என்றார் | 110:1 | ரோம. 8:35-39 |
| 13 | புத | எபி. 13:1-8 | சகோதரர் ... கடவது | 13:1 | 2 கொரி. 4:16-19 |
| 14 | வியா | லூக். 24:50-53 | அவர்களை ... கொள்ளப்பட்டார் | 24:51 | சங். 37:1-7 |
| 15 | வெள் | மத். 28:10-20 | ஆகையால் ... கொடுத்து | 28:19 | லூக். 20:20-40 |
| 16 | சனி | ரோம. 8:36-39 | உயர்வானாலும் ... நிச்சயித்திருக்கிறேன் | 8:39 | 1 சாமு. 6:7-16 |
| 17 | ஞா | யோவா. 14:12-17 | உலகம் ... அறிவீர்கள் | 14:17 | 1 கொரி. 12:12-31 |
| 18 | திங் | ஏசா. 59:9-14 | நியாயம் ... போகிறது | 59:14 | யோவே. 2:18-32 |
| 19 | செவ் | சங். 143 | உமக்கு ... நடத்துவாராக | 143:10 | ரோம. 5:1-11 |
| 20 | புத | எபி. 10:1-10 | இயேசு ... பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் | 10:10 | அப். 4:32-37 |
| 21 | வியா | ஏசா. 44:1-8 | தாகமுள்ளவன் ... ஊற்றுவேன் | 44:3 | அப். 2:14-21 |
| 22 | வெள் | 1கொரி. 3:1-10 | எனக்கு ... பார்க்கக்கடவன் | 3:10 | யோவா. 16:1-7 |
| 23 | சனி | ஏசா. 59:13-21 | மீட்பர் ... சொல்லுகிறார் | 59:20 | யோவா. 16:12-20 |
| 24 | ஞா | அப். 2:1-12 | அப்பொழுது ... நிரப்பிற்று | 2:2 | லேவி. 23:15-21 |
| 25 | திங் | 1இரா. 19:9-18 | பூமி ... உண்டாயிற்று | 19:12 | அப். 8:4-17 |
| 26 | செவ் | சங். 1 | துன்மார்க்கரோ ... இருக்கிறார்கள் | 1:4 | அப். 19:1-10 |
| 27 | புத | அப். 2:1-12 | அவர்களெல்லாரும் ... பேசத்தொடங்கினார்கள் | 2:4 | ஆதி. 11:1-9 |
| 28 | வியா | யோவா. 20:17-23 | இயேசு ... அனுப்புகிறேன் | 20:21 | ஆதி. 1:1-31 |
| 29 | வெள் | ஆதி. 1:1-10 | பூமியானது ... கொண்டிருந்தார் | 1:2 | யோனா 4:1-11 |
| 30 | சனி | அப். 13:1-5 | அவர்கள் ... திருவுளம்பற்றினார் | 13:2 | சங். 41:!-13 |
| 31 | ஞா | யோவா. 3:16-21 | தேவன் ... அன்புகூர்ந்தார் | 3:16 | ஆதி. 1:26-31 |

# சபை ஆயரிடமிருந்து...

**"நான் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதியாகமம் 12:2)**

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையானவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என்னுடைய அன்பின் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்மட்டும் நம்முடைய வாழ்வில் எல்லா நன்மைகளையும் தந்து, நம்மை வழுவாதபடி பாதுகாத்து வரும் ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

இந்த ஆண்டின் லெந்துக் காலங்கள் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்தார். அதிலும் விசேஷமாக இந்த ஆண்டு நடைபெற்ற புனித வெள்ளி சிலுவை திருமொழி தியானத் தொழுகையில் சிலுவை தியான உரை வழங்கிய நம்முடைய திருச்சபை அங்கத்தினர்கள் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன். ஆண்டவர் தாமே நம்முடைய திருச்சபையின் குடும்பங்களையும், ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக.

மே மாதம் உழைப்பாளர்கள் தங்கள் உரிமைகளுக்காய் போராடினதை நினைவுகூரும் மாதமாகும். தொழிலாளர்கள் தான் ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். திருமறை, எல்லாரும் உழைக்க வேண்டும் என்று சொல்லி கட்டளையிடுகின்றது. 2 தெசலோனிக்கேயர் 3:10ல், "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவுங்கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் நாமும் வாழ்வில் எல்லா உயர்வான அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள ஜெபத்தோடு உண்மையாக உழைப்போம். ஒவ்வொரு உழைப்பாளர்களுக்கும் மே தின வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

மேலும் மே 12 ஆம் தேதி உலக தாதியர் தினத்தையும் நாம் இந்த மாதத்தில் சந்திக்கின்றோம். நம்முடைய திருச்சபையில் மருத்துவத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் அனைவருக்கும் மருத்துவர் தின நல்வாழ்த்துக்களை கூறிக் கொள்கின்றேன்.

நம்முடைய திருச்சபையைச் சார்ந்த திருமதி. இனிதா மோசஸ் அவர்களின் தாயார் திருமதி A. ஜேன் மேரி லெட் கேத்தரின் அவர்கள் 06-04-2026 அன்று திங்கட்கிழமை இறையழைப்பை பெற்றார்கள். அன்பு தாயாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு திருச்சபையின் சார்பில் இரங்கலை கூறிக் கொள்கின்றோம்.

கடந்த மாதம் 21-04-2026 நாள் நமது திருச்சபையின் அங்கத்தினர் திரு.சாலமன் ராஜா, அவர்களது மனைவி திருமதி. ஷெர்லி மோள் அவர்களின் தந்தையார் திரு ட.செல்வராஜ் அவர்கள் இறையழைப்பை பெற்றார்கள். தங்கள் அன்புக்குரியோரை இழந்த குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிக்க உங்களை அன்புடன் வேண்டுகின்றேன்.

நமது திருச்சபையின் திருப்பணிகளை தாங்குகின்ற யாவருக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன். திருச்சபையின் திருப்பணிகள் தொடர்ந்து சிறப்பாய் நடைபெற ஜெபிக்கவும் அறுவடை பண்டிகையில் ஏலம் மற்றும் பிற பாக்கி வைத்திருப்போர் அவைகளை விரைவாக கொடுத்து ஒத்துழைக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மாதத்தில் பிரவேசித்திருக்கின்றோம். உண்மையும், உத்தமுமாக உழைப்போம். புதிய மாதத்திற்குரிய ஆசீர்வாதங்களை சொந்தமாக்கிக் கொள்வோம்.

ஆண்டவர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!!!

**ஜெபத்துடன்,**
**கிறிஸ்துவின் திருப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர் மற்றும் குடும்பம்.**

# அருளுரைப்பகுதி

**"உன் கைகளின் உழைப்பின் பலனை நீ புசிப்பாய்,**
**நீ பாக்கியவானாயிருப்பாய், உனக்கு நன்மை உண்டாயிருக்கும்."**
**சங்கீதம் 128:2**

உழைப்பு என்பது தேவன் மனிதனுக்குக் கொடுத்த பரிசு. மனிதன் படைக்கப்பட்ட உடனே, ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் காக்கவும் தேவன் பொறுப்பளித்தார் (ஆதியாகமம் 2:15). ஆகவே உழைப்பு ஒரு சாபம் அல்ல, அது ஒரு ஆசீர்வாதம். உண்மையாய் உழைக்கும் ஒவ்வொருவரையும் தேவன் காண்கிறார், மதிக்கிறார், ஆசீர்வதிக்கிறார். உழைப்பாளர் தினத்தில், நம் உழைப்பை மதித்து, அதை ஆசீர்வதிக்கும் தேவனை நன்றியுடன் நினைவுகூர அழைக்கப்படுகின்றோம்.

**1. உழைப்பை ஏற்படுத்திய கடவுள்**

உழைப்பு தேவனுடைய திட்டம் ஆதியாகமம் 2:15-ல், தேவன் ஆதாமை ஏதேன் தோட்டத்தில் வைத்து "அதைப் பயிரிடவும் காக்கவும்" கட்டளையிட்டார்.

- உழைப்பு சாபமல்ல, ஆசீர்வாதம்.
- வேலை ஒரு பாரமல்ல, பொறுப்பு.
- உழைப்பு மனிதனின் மதிப்பை வெளிப்படுத்துகிறது.

மார்ட்டின் லூத்தர் கூறுகிறார்:
"ஒரு சாதாரண வேலை கூட, தேவனுக்காகச் செய்யப்படும் போது, அது பரிசுத்தமான பணியாகிறது."

**2. உண்மையாய் உழைப்பவர்களை தேவன் கவனிக்கிறார்**

நீதிமொழிகள் 14:23 "எல்லா உழைப்பிலும் பலன் உண்டு."
மனிதர்கள் நம் உழைப்பை கவனிக்காமல் இருக்கலாம். சில நேரங்களில் நமது உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். ஆனால் தேவன் ஒவ்வொரு வியர்வைத்துளியையும் காண்கிறார்.

- மறைக்கப்பட்ட உழைப்பை அவர் அறிவார்.
- அமைதியான போராட்டங்களை அவர் உணர்கிறார்.
- கண்ணீரோடு செய்த உழைப்பையும் அவர் நினைவில் கொள்கிறார்.

யாக்கோபு பல ஆண்டுகள் உழைத்தார். மனிதர் அவரை ஏமாற்றினாலும், இறுதியில் தேவன் அவரை ஆசீர்வதித்தார்.

**3. நேர்மையான உழைப்புக்கு தேவன் அங்கீகாரம் தருகின்றார்.**
நீதிமொழிகள் 22:29
“தன் வேலையில் ஜாக்கிரதையுள்ள மனுஷனை நீ கண்டாயா? அவன் ராஜாக்களின் முன் நிற்பான்.”

- திறமை வாய்ந்தவர் உயர்த்தப்படுவார்.
- நேர்மையானவர் நம்பிக்கைக்குரியவர் ஆவார்.
- அர்ப்பணிப்புடன் உழைப்பவர் முன்னேற்றம் காண்பார்.

**4. உழைப்பின் பலனை அனுபவிக்கச் செய்கிற கடவுள்**
சங்கீதம் 128:2
உழைப்பின் பலனை அனுபவிப்பது தேவனின் அருள்.

- உடல்நலம் ஒரு ஆசீர்வாதம்
- குடும்ப மகிழ்ச்சி ஒரு ஆசீர்வாதம்
- மனநிறைவு ஒரு ஆசீர்வாதம்
- உழைப்பின் கனியை காண்பது ஒரு ஆசீர்வாதம்

பலர் உழைக்கிறார்கள், ஆனால் எல்லோரும் அதன் பலனை அனுபவிப்பதில்லை. பலனை அனுபவிக்கச் செய்வதும் தேவனே.

**5. உழைக்கும் கைகளை தேவன் உயர்த்துகிறார்**
உபாகமம் 28:12
தேவன் உழைக்கும் கைகளை வெறுமையாய் அனுப்பமாட்டார்.

- யோசேப்பு அடிமையாக இருந்தார், ஆனால் உழைப்பால் ஆளுநரானார்.
- தாவீது மேய்ப்பனாக இருந்தார், ஆனால் ராஜாவானார்.
- பேதுரு மீனவராக இருந்தார், ஆனால் மனிதரைப் பிடிக்கும் ஊழியக்காரரானார்.

இவர்களின் வாழ்க்கை உழைப்பை தேவன் எவ்வாறு உயர்த்துகிறார் என்பதற்குச் சாட்சி.
Oswald Chambers என்பவர் கூறுகின்றார்
“நாம் செய்யும் சாதாரண வேலைகளும், தேவனுடைய கைகளில் அசாதாரணமாக மாறுகின்றன.”
அன்புக்குரியவர்களே, நம்முடைய வாழ்விலும் நேர்மையாய் உழைத்து இறையாசியை பெற்றுக்கொள்ள ஆண்டவர் நம்மை அழைக்கின்றார்.

**கிறிஸ்துவின் திருப்பணியில்**
**Rev. J. தேவராஜ ஜெபஸ்டின்**
**சபை ஆயர்**

# செயலர் மடல்

*“கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.” (சங்கீதம் 85:7)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

என்றென்றும் ஜீவித்திருக்கிறவராகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபைக்குழுவின் சார்பில் விசுவாசிகள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மாத ஊழியங்கள் யாவும் ஆசீர்வாதமாய் நடைபெற கிருபைபுரிந்து, நம் யாவரையும் பாதுகாத்து நடத்துகிற நம் தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

இந்தவருட லெந்து நாட்களின் அனைத்து ஊழியங்களிலும் கர்த்தர் உடனிருந்து ஆசீர்வாதமாக நடைபெற அருள் புரிந்தார். 03-04-2026 பரிசுத்த வெள்ளி தியானத்தொழுகையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் உதிர்த்த வார்த்தைகளை பகிர்ந்து கொண்ட Mrs.Shermily Melvin, Mrs.Angelin Jibil Jeba Singh, Mr.Vincent lal, Mrs.Vijaya Latha, Mr.K.ArunKumar, Mrs. Shalini Teenu, Mr. Justin Singh ஆகியோரையும், அந்த நாள் ஆராதனையில் யாவரையும் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்திய நமது ஆயர் Rav. J. Deva Raja Jabastin அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபையைச் சார்ந்த திருமதி. இனிதா மோசஸ் அவர்களின் தாயார் திருமதி A. ஜேன் மேரி லெட் கேத்தரின் அவர்கள் 06-04-2026 அன்று திங்கட்கிழமை இறையழைப்பை பெற்றார்கள். அன்பு தாயாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு திருச்சபையின் சார்பில் இரங்கலை கூறிக் கொள்கின்றோம்.

கடந்தமாதம் 21-ஆம் நாள் நமது திருச்சபையின் அங்கத்தினர் திரு.சாலமன் ராஜா, அவர்களது மனைவி திருமதி. ஷெர்லி மோள் அவர்களின் தந்தையார் திரு ட.செல்வராஜ் அவர்கள் இறையழைப்பை பெற்றார்கள். தங்கள் அன்புக்குரியோரை இழந்து காணப்படுகிறதான, குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நமது திருச்சபையின் ஊழியங்கள்மேல் கரிசனைகொண்டு ஜெபங்களிலும், உற்சாகமான காணிக்கைகளினாலும் தாங்குகின்ற யாவருக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன். திருச்சபையின் வரும் நாட்களின் தேவைகளை நினைவில் கொண்டு பாக்கி வைத்திருப்போர் அவைகளை கொடுத்து ஒத்துழைக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருச்சபையின் வாயிலாக நடைபெறுகிற ஒவ்வொரு ஊழியங்களுக்காகவும், திருச்சபையின் விசுவாசிகள் யாவரும் ஆவிக்குரிய வலிமையை பெறவும் ஜெபிப்போம். கர்த்தர் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதித்து நடத்துவாராக.

**சபைக்குழு சார்பில்,**
**K. அருண்குமார் - செயலாளர்.**

# ஆண்கள் பகுதி

## “யோசுவா - தைரியமாய் எழும் தேவனுடைய மனிதன்”

**“நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, அஞ்சாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.”**
**யோசுவா 1:9**

யோசுவா என்பது வெறும் ஒரு மனிதரின் பெயர் அல்ல, அது ஒரு தலைமுறை மாற்றத்தின் சின்னம். மோசேயின் பின் தலைமையை ஏற்றவர். சவால்கள் இருந்தன, எதிரிகள் இருந்தனர், பொறுப்புகள் இருந்தன. ஆனால் யோசுவா வெற்றி பெற்றார். ஏன்? அவர் தேவனோடு நடந்தார்.

இன்றைய ஆண்கள் குடும்பத்தில், சபையில், சமுதாயத்தில் யோசுவாவைப் போன்ற தலைவர்களாக அழைக்கப்படுகிறார்கள்.

**1. தேவனைப் பின்பற்றும் மனிதன்**

யோசுவா 24:15 “நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்.”
யோசுவா முதலில் ஒரு சேவகர். மோசேயின் உதவியாளராக இருந்தார். தலைமை என்பது சேவையிலிருந்து தொடங்குகிறது.

- தேவனைப் பின்பற்றாதவர் மற்றவர்களை வழிநடத்த முடியாது.
- குடும்பத் தலைவன் முதலில் தேவனுக்கு கீழ்ப்படிவான் ஆக வேண்டும்.
- உண்மையான ஆண்மை என்பது அதிகாரத்தில் அல்ல, அர்ப்பணிப்பில் இருக்கிறது.

**2. தைரியமாக நிற்கும் மனிதன்**

யோசுவா 1:6-7
யோசுவா பலமுறை “தைரியமாயிரு” என்று ஊக்குவிக்கப்பட்டார். ஏனெனில் அவர் எதிர்கொள்ள வேண்டியவை பெரிதாக இருந்தன.

- பயம் எல்லோருக்கும் வரும், ஆனால் விசுவாசம் பயத்தை வெல்லும்.
- ஒரு ஆண் சவால்களைத் தவிர்க்காமல், தேவனோடு எதிர்கொள்கிறான்.
- குடும்பத்திற்காக, சத்தியத்திற்காக, விசுவாசத்திற்காக தைரியமாக நிற்க வேண்டும்.

**3. வார்த்தையால் வழிநடத்தப்படும் மனிதன்**

யோசுவா 1:8

“இந்த நியாயப்பிரமாணப் புத்தகம் உன் வாயைவிட்டு நீங்காதிருப்பதாக...” யோசுவாவின் வெற்றியின் ரகசியம்—தேவனுடைய வார்த்தை.

- வேதாகமம் இல்லாத தலைமை திசையற்றது.
- தேவனுடைய வார்த்தை ஆணின் சிந்தனையை, செயல்களை, முடிவுகளை வடிவமைக்கிறது.
- வேதாகமத்தில் வேரூன்றிய மனிதன் காற்றால் அசையாத மரம்போல் இருப்பான்.

**4. குடும்பத்தை வழிநடத்தும் மனிதன்**

யோசுவா 24:15

யோசுவா தனது வீட்டை தேவனுக்காக அர்ப்பணித்தார்.

- ஆண் குடும்பத்தின் ஆன்மீக காவலன்.
- மனைவி, பிள்ளைகள், குடும்பம் அவர்களின் விசுவாச வளர்ச்சிக்கு நீங்கள் பொறுப்பு.
- குடும்ப ஜெபம், வேதாகம வாசிப்பு, தேவபயம் இவை வீட்டின் அடித்தளம்.

**5. வெற்றியைப் பெறும் மனிதன்**

யோசுவா பல யுத்தங்களில் வெற்றி பெற்றார்.

- எரிகோ மதில்கள் விழுந்தன.
- யோர்தான் பிளந்தது.
- சூரியன் நின்றது.

இவை யோசுவாவின் வல்லமையால் அல்ல, தேவனுடைய சந்நிதியால்.
உண்மை: தேவனோடு நடக்கும் ஆண், வாழ்க்கைப் போராட்டங்களில் வெற்றி காண்பான்.

மத்தேயு ஹென்றி “யோசுவாவின் வாழ்க்கை, விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைந்தால் வெற்றி உறுதி என்பதை காட்டுகிறது.” என்கிறார்.
இன்றைய உலகம் திறமையான ஆண்களைத் தேடவில்லை, தேவபக்தியுள்ள ஆண்களைத் தேடுகிறது. பலம் உள்ளவர்களை அல்ல, பரிசுத்தம் உள்ளவர்களைத் தேடுகிறது.

யோசுவாவைப் போல சொல்லுவோமாக:
**“நானும் என் வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்.”**

**Mr. J.D.R.Alwin**

# பெண்கள் பகுதி

## தேவனுக்கு பயந்த மருத்துவச்சிகள் (யாத்திராகமம் 1:15–21)

எகிப்தின் வல்லரசரான பார்வோனின் கட்டளைக்கு எதிராக, இரண்டு சாதாரண பெண்கள் சிப்பிராள் மற்றும் பூவாள் நின்றார்கள். அவர்களிடம் அதிகாரம் இல்லைஞூ ஆயினும் அவர்களிடம் இருந்தது தேவபயம். அந்த தேவபயமே அவர்களை வரலாற்றை மாற்றிய பெண்களாக ஆக்கியது.
“மருத்துவச்சிகளோ தேவனுக்குப் பயந்து…” (யாத்திராகமம் 1:17)
இன்று தேவபயமுள்ள பெண்களின் வாழ்க்கை எவ்வளவு வல்லமையானது என்பதை காண்போம்.

**1. தேவபயம் மனித பயத்தை வெல்லச் செய்கிறது**

பார்வோன் ஒரு அரசன். அவனது கட்டளை மீறப்படக் கூடாது. ஆனால் சிப்பிராளும் பூவாளும் பார்வோனை விட தேவனுக்கு அதிகம் பயந்தார்கள். மனிதரின் கட்டளை மரணத்தைத் தரலாம், தேவனின் கட்டளை ஜீவனைத் தரும்.
இறையியலாளர் ஜான் கால்வின் கூறுகிறார்:
“தேவனுக்கு உண்மையாகப் பயப்படுகிறவர், மனிதர்களின் அச்சுறுத்தல்களுக்கு அடிமையாவதில்லை.”

அன்புக்குரியவர்களே குடும்ப அழுத்தம், சமூக எதிர்பார்ப்பு, உலகத்தின் கருத்து இவை அனைத்தையும் விட தேவனின் சித்தத்திற்கே முதன்மை கொடுக்க அழைக்கப்படுகின்றோம்.

**2. தேவபயம் உயிரைக் காக்கும் கருணையை உருவாக்குகிறது**

மருத்துவச்சிகளின் பணி குழந்தைகளைப் பிறப்பிக்குவது. பார்வோன் அவர்களின் அழைப்பை மரண கருவியாக மாற்ற முயன்றான். ஆனால் அவர்கள் தங்கள் அழைப்பை வஞ்சிக்கவில்லை.
அவர்கள் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தார்கள், மரணத்தை அல்ல.
ஒரு அறிஞர் கூறுகிறார்:
“ஒரு மருத்துவச்சி என்பவர் உயிரை வெளிக்கொணரும் ஒருவர், மரணத்தை ஏற்படுத்துபவர் அல்ல.”

பெண்ணின் இதயம் இயற்கையாகவே உயிரைக் காக்கும் இதயம். தாய், ஆசிரியர், ஆலோசகர், ஊழியக்காரி எந்த பொறுப்பிலிருந்தாலும், உங்கள் அழைப்புக்கேற்ற வாழ்க்கை வாழ அழைக்கப்படுகிறீர்கள்.

**3. தேவபயம் அநீதிக்கு எதிராக நிற்கத் துணிவளிக்கிறது**
இது வெறும் கீழ்ப்படியாமை அல்ல, இது நீதிக்கான நிலைபாடு.
சிப்பிராளும் பூவாளும், அதிகாரத்தின் தவறான உத்தரவுக்கு "இல்லை" என்று சொன்னார்கள். இது வேதாகமத்தில் பதிவான முதல் குடிமை மறுப்பு சம்பவங்களில் ஒன்று.
அன்புக்குரியவர்களே நம்முடைய வாழ்விலும்

- அநீதிக்கு மவுனமாய் இருக்காதீர்கள்.
- பலவீனருக்காக குரல் கொடுங்கள்.
- உண்மைக்காக நில்லுங்கள்.

தேவபயம் உள்ள பெண், சூழ்நிலைக்கு அடிமை அல்ல, சத்தியத்திற்கு சாட்சியாய் இருக்கின்றாள்.

**4. தேவபயம் தலைமுறைகளை ஆசீர்வதிக்கிறது**
"அவர்கள் தேவனுக்குப் பயந்தபடியால், அவர் அவர்களுக்கு குடும்பங்களை உண்டாக்கினார்" (யாத். 1:21).
அவர்கள் பிறர் குடும்பங்களை காத்தார்கள், தேவன் அவர்களுடைய குடும்பத்தை கட்டினார்.
நீங்கள் பிறரை உயர்த்தும்போது, தேவன் உங்களை உயர்த்துவார்.
நீங்கள் உயிரைக் காக்கும்போது, தேவன் உங்கள் சந்ததியை ஆசீர்வதிப்பார்.
இறையியலாளர்கள் இதை "தெய்வீகப் பிரதிபலன்" என்று கூறுகிறார்கள் நீங்கள் விதைப்பதை விட அதிகமாக தேவன் அறுவடை செய்யச் செய்கிறார்.

**5. தேவபயமுள்ள பெண்களின் பெயர்கள் மறக்கப்படமாட்டாது**
பார்வோனின் பெயர் இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த இரண்டு பெண்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன: சிப்பிராள், பூவாள் ஏன்?
உலகம் அதிகாரமுள்ளவர்களை நினைவில் வைத்துக்கொள்ளும். தேவன் விசுவாசமுள்ளவர்களை நினைவில் வைத்துக்கொள்கிறார்.
அன்புக்குரியவர்களே நம்முடைய தியாகத்தை உலகம் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால் தேவன் உங்கள் விசுவாசத்தைக் காண்கிறார்.

சிப்பிராளும் பூவாளும் அரண்மனையில் வாழவில்லை, ஆனால் அவர்கள் தேவனின் இதயத்தில் இடம்பிடித்தார்கள்.
அவர்கள் அரசியல் அதிகாரம் இல்லாதவர்கள், ஆனால் ஆன்மீக அதிகாரம் கொண்டவர்கள்.
அவர்கள் சாதாரண பெண்கள், ஆனால் அசாதாரண விசுவாசம் கொண்டவர்கள்.

இன்றும் தேவன் இப்படிப்பட்ட பெண்களைத் தேடுகிறார்:
- தேவனைப் பயப்படும் பெண்கள்
- உயிரைக் காக்கும் பெண்கள்
- நீதிக்காக நிற்கும் பெண்கள்
- தலைமுறைகளை ஆசீர்வதிக்கும் பெண்கள்

தேவபயம் உள்ள ஒரு பெண், ஒரு குடும்பத்தை மாற்றுவாள். ஒரு சபையை மாற்றுவாள். ஒரு தேசத்தையே மாற்றுவாள். ஆமென்.

**திருமதி. P.ஜாண்சி**
**ஆயரம்மா.**

# திருக்குறள் வழி மறையறிவோம்

**திருக்குறள் 4 (கடவுள் வாழ்த்து)**
**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

இந்தக் குறள், மனித வாழ்வின் ஆழமான ஆன்மீக உண்மையை எடுத்துரைக்கிறது. ஆசையும் வெறுப்பும் இல்லாத பரிபூரணமான இறைவனின் திருவடிகளைச் சார்ந்தவர்களுக்கு எக்காலத்திலும் துன்பம் நிரந்தரமாக நிலைக்காது என்பதே இதன் மையக் கருத்து.

**1. வேண்டுதல் வேண்டாமை இலான் – இறைவனின் பரிபூரண இயல்பு**

இறைவனுக்கு எதையும் பெற வேண்டும் என்ற ஆசையோ, எதையும் தவிர்க்க வேண்டும் என்ற வெறுப்போ இல்லை. அவர் முழுமையானவர், குறைவற்றவர்.

பைபிள் கூறுகிறது:

“தேவன் மனித கைகளால் சேவிக்கப்படுகிறவர் அல்லவு அவருக்கு ஏதோ குறை இருப்பதுபோல அல்ல, அவரே எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் எல்லாவற்றையும் கொடுக்கிறார்.” அப்போஸ்தலர் 17:25

இறைவன் எதையும் நம்மிடமிருந்து தேவைப்படுபவர் அல்ல, மாறாக, நமக்குத் தேவையான அனைத்தையும் அருள்பவர்.

**2. இலானடி சேர்ந்தார் – இறைவனைச் சார்ந்த வாழ்க்கை**

இறைவனின் பாதங்களைச் சார்வது என்பது அவர்மீது முழு நம்பிக்கை வைப்பது, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவது, அவரோடு உறவாடுவது. சங்கீதம் 37:5

“உன் வழியை கர்த்தருக்கே ஒப்புவி, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே அதை நிறைவேற்றுவார்.”

இறைவனைச் சார்ந்த வாழ்க்கை என்பது பிரச்சினையற்ற வாழ்க்கை அல்ல, ஆனால் பிரச்சினைகளின் நடுவிலும் பாதுகாப்பும் சமாதானமும் நிறைந்த வாழ்க்கை.

**3. யாண்டும் இடும்பை இல – துன்பத்தின் மத்தியில் வெற்றி**

இது துன்பம் வராது என்று சொல்லவில்லை, துன்பம் நம்மை வெல்லாது என்று சொல்கிறது. இறைவனைச் சார்ந்தவர்களுக்கு துன்பம் நிரந்தரமல்ல.

யோவான் 16:33

“உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் தைரியமாக இருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்.”

ரோமர் 8:28

“தேவனை அன்புகூருகிறவர்களுக்கெல்லாம் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது.”

**4. இறைவனைச் சார்ந்தவர்களின் ஆசீர்வாதங்கள்**

- கவலையில் ஆறுதல்
- குழப்பத்தில் வழிகாட்டுதல்
- பலவீனத்தில் பலம்
- துன்பத்தில் தாங்கும் கிருபை
- சோதனையில் வெற்றி

ஏசாயா 26:3

“உம்மை நம்புகிற மனதை நீர் பூரண சமாதானத்தில் காத்துக்கொள்வீர்.”

இறைவன் ஆசையற்றவர், அவர் பரிபூரணர். அந்தப் பரிபூரண தேவனின் திருவடிகளைச் சார்ந்தவர்களுக்கு வாழ்க்கையில் புயல்கள் வந்தாலும், அவை அவர்களை அழிக்க முடியாது.

ஆகவே, நாம் இறைவனின் திருவடிகளைப் பற்றிக்கொண்டால், இடர்கள் வரலாம், ஆனால் இடர்பட மாட்டோம். சோதனைகள் வரலாம். ஆனால் சோர்ந்து போக மாட்டோம். கண்ணீர் வரலாம், ஆனால் நம்பிக்கை குறையாது.

இறைவனின் திருவடிகளைச் சார்ந்தவர்களுக்கு “யாண்டும் இடும்பை இல.”

Compiled by **Mr. J.D.R Alwin**

# மே தினம், மேன்மையான தினம்!

மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிபடுத்திய தினம் மே 1.

அமெரிக்காவில் 1890ஆம் ஆண்டு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கம் அற்ற தாக்குதலை நடத்தியது. ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும், முதலாளிகள் உலக வரலாறின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி இதையெல்லாம் செய்வதற்கு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் காரல் மார்க்ஸ். இவ்வாறு அவர் கூறி 42 ஆண்டுகள், உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தால் இந்த வெற்றி நிலைநாட்டப்பட்டது.

தொழிலாளர்களின் உழைப்பினால்தான் உலகமே இயங்குகிறது. தொழிலாளர்களின் உழைப்பு இன்றி எந்தப் பொருளும் உருவாவதில்லை என்பதை உணர்ந்தனர். தாம், விலங்குகளைவிட கீழ்த்தரமாக நடத்தப்படுவதையும், உழைப்பின் பலன்களை எல்லாம் அனுபவிக்கும் முதலாளிகள், தொழிலாளர்களை வறுமையிலும் துன்பத்திலும் இருக்கும்படி செய்கின்றனர் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராடினர்.

1886ஆம் ஆண்டு அமெரிக்க தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் துவங்கியது. இந்த வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராட்ட இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

இவ்வாறு உலகெங்கும் நடந்த போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவில் இதற்கான வெற்றியை அடைந்தனர். தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசு அவர்களின் கோரிக்கையை 1890ஆம் ஆண்டு ஏற்றது. தொழிலாளர்களின் இந்த வெற்றியை குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாக மே தினம் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது. பொதுவுடைமைவாதி ம.சிங்காரவேலர் 1923ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவைக் கொண்டாடினர்.

# உலக செவிலியர் தினம் - மே 12
# International Nurses Day - May 12

செவிலியர் பணி என்பது தொழில் அல்ல, ஒரு வகை தொண்டு! ஊதியத்திற்கு அப்பாற்பட்டு சாதாரண மருத்துவ சேவைகளிலிருந்து போர்க்கால மருத்துவ சேவைகள் வரை செய்யும் முழு அர்ப்பணிப்பு! சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு சகிப்பு தன்மையுடன் ஆற்றும் மகத்தான சேவையே செவிலியர் பணி. ஒரு காலத்தில் செவிலியர் சேவை கவுரவமான, மரியாதைக்குரிய பணியாக கருதப்படவில்லை. மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பத்தை சேர்ந்த பெண்களே செவிலியர் பணியில் ஈடுபட்டு வந்தனர். அதுமட்டுமல்ல, அந்தக் காலத்தில் உயர்ந்த செல்வ குடும்பங்களில் சமையல்காரிகளாகவும் கூட செவிலியர்கள் வேலை செய்யவேண்டிய நிலை இருந்தது. இந்த நிலைமையை மாற்றி செவிலியர்களுக்கென சமுதாயத்தில் மதிப்பை உருவாக்கியவர்தான் பிளாரன்ஸ் நைட்டிங்கேல்.

நவீன தாதியல் முறை இங்கிலாந்தில் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து, பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக தன்னை செவிலியர் பணியில் ஈடுபடுத்தி கொண்டவர் பிளாரன்ஸ் நைட்டிங்கேல். நவீன தாதியியல் முறையை உருவாக்கி செவிலியர் பயிற்சி பள்ளியையும் தொடங்கியவர். 1844, டிசம்பரில் லண்டனிலிருந்த ஆதரவற்றோர் விடுதி ஒன்றில் உயிரிழந்த ஏழையின் மரணமே இவரது பாதையை புரட்டி போட்டது. வறியவர்களுக்கென்று யாருமே உதவி புரியவில்லையே? என்று மனம் நொந்து போனார். இதனைத் தொடர்ந்து பிளாரன்ஸ், ஆதரவற்றோர் விடுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முன்னணியில் நின்று வாதாடினார். அதுமுதல் வறியவர்கள் மீதும், இயலாதவர் மீதும் அவரது அக்கறை நீண்டுகொண்டே சென்றது.

கை விளக்கேந்திய காரிகை அதன் முத்தாய்ப்பாக அமைந்தது ஒரு சம்பவம். 1854-ல் கிரிமியாவைக் கைப்பற்றிய ரஷ்யாவுக்கு எதிராக இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் போர் தொடுத்தன. கிரிமியன் போரில் பாதிக்கப்பட்ட படைவீரர்கள் குத்துயிரும் குலையுயிருமாக வீழ்ந்து கிடந்தனர். அவர்களுக்கு யாருமே உதவ முன்வரவில்லை. இறக்கும் தருவாயில் பலர் முனகலுடன் இருந்தனர். அந்த ராணுவ மருத்துவமனைக்கு 38 செவிலியருடன் சென்றார் பிளாரன்ஸ். வசதி

குறைவுகள் அங்கு காணப்பட்டாலும் தன்னால் முடிந்தவரை ராணுவ வீரர்களுக்கு சிகிச்சை வழங்கினார். உயிரிருக்கு போராடிய முழு படையையும் தன்னிடமிருந்த குறைந்த மருத்துவ வசதி மற்றும் நிறைந்த அன்பிலும் குணப்படுத்தினார். அந்த இரவு வேளைகளில் கையில் விளக்கு ஒன்றை ஏந்திய வண்ணம் நோயாளிகளிடம் சென்று நலம் விசாரித்து மருந்துகளையும் வழங்கி வந்தார். தங்களை காக்க ஹவிண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்த தேவதை என ராணுவ வீரர்கள் நைட்டிங்கேலை கவுரவித்தனர். அதனால்தான் அவர் **“கைவிளக்கு ஏந்திய காரிகை”** என்றும் அழைக்கப்பட்டார்.

உணர்வுபூர்வமான தருணம் அவர் பிறந்த மே 12-ஆம் நாளே உலக செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது. செவிலியர்களுக்கென்றே தனி மரியாதையும், கண்ணியத்தையும் உருவாக்கி கொடுத்தவர் பிளாரன்ஸ் நைட்டிங்கேல். அவர் இல்லாவிட்டால் செவிலியர் துறை இந்த அளவுக்கு இவ்வளவு காலம் நீண்டு வளர்ந்திருக்காது. அதனால் அவரை நினைவுகூர்ந்து இன்றைய தினத்தில் லண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் (Westminster Abbey) செவிலியர்கள் அந்த மாளிகையில் ஒன்று கூடுவர். அப்போது விளக்கு ஒன்று ஏற்றப்பட்டு அது செவிலியர்கள் ஒவ்வொருவராலும் கைமாறப்பட்டு பின்னர் அங்குள்ள உயர்ந்த பீடத்தில் வைக்கப்படும். அதாவது ஒரு செவிலியரிடம் இருந்து மற்றொருவருக்குத் தமது அறிவையும், அனுபவத்தையும், மனித நேயத்தையும் தோள் மாற்றம் செய்வதே இதன் அர்த்தம். இது ஒரு உன்னதமான உணர்வுப்பூர்வமான தருணமாகும்.

செவிலியர்கள் - இன்னொரு தாய் இதேபோல, தமிழகம் உட்பட உலகின் ஒவ்வொரு மருத்துவமனைகளிலும், செவிலியர்கள் அனைவரும் ஒன்றுகூடி மெழுகுவர்த்தி ஏந்தி, சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல் நோயாளிகளிடம் நடந்து கொள்வோம்ளூ நோயாளிகளுக்கு மதிப்பளிப்பது, நோயாளிகளின் உடல் நலத்தில் அக்கறையுடன் செயல்படுவது என்பன உள்ளிட்ட உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்வார்கள். ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் செவிலியர்கள்தான் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் மறுக்க முடியாததுமான விஷயம் ஆகும். “செவிலியர்கள் - இன்னொரு தாய்”!! அவர்களது பணி என்றும் போற்றத்தக்கது!! மதிக்கத்தக்கது!! வணங்கத்தக்கது!!

# கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவ பண்புகள்

## நீதியின் மேல் பசி தாகம் கொள்ளுதல்

**“நீதிக்காக பசி தாகமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்.” (மத்தேயு 5:6)**

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவர் இயேசு கூறிய பாக்கியவான்களின் வரிசையில், இந்த ஆறாவது பாக்கியம் மிக ஆழமான ஆன்மீக உண்மையை வெளிப்படுத்துகிறது. மனிதனின் உடலுக்கு பசி, தாகம் எவ்வளவு அவசியமோ, அதைவிட ஆத்துமாவிற்கு தேவனுடைய நீதி அவசியம். உணவின்றி உடல் பலவீனமாகும், தண்ணீரின்றி உயிர் வாடும். அதுபோல, நீதியின்றி ஆன்மா வறண்டு போகிறது. நீதிக்காக ஏங்கும் மனமே தேவனுக்குப் பிரியமான மனம்.

வேதாகமத்தில் “நீதி” என்பது வெறும் நன்னடத்தை அல்ல. அது:

- தேவனோடு சரியான உறவு
- மனிதரோடு நேர்மையான நடத்தை
- தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிதல்
- பரிசுத்த வாழ்வு

திருமறை கூறுகிறது: “உம்முடைய வார்த்தை நீதியானது.”
நீதி என்பது தேவனுடைய குணாதிசயம். ஆகையால் நீதியை நாடுவது, தேவனை நாடுவதற்குச் சமம்.
பசி, தாகம் என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகள். அவற்றை ஒத்திவைக்க முடியாது. அதுபோலவே, தேவனுடைய நீதிக்கான ஏக்கம் நம் வாழ்வின் முதன்மையான தேவையாக இருக்க வேண்டும்.

**பசியின் பண்புகள்**

- தொடர்ந்து நினைவூட்டும்
- திருப்தி அடையும் வரை ஓயாது
- மற்றவற்றை விட முக்கியமானது

**தாகத்தின் பண்புகள்**

- தீவிரமானது
- உடனடி தீர்வு தேவை
- உயிரைக் காக்கும்

“மான் நீரோடைகளை வாஞ்சிப்பதுபோல், என் ஆத்துமா உம்மை வாஞ்சிக்கிறது.”

1. **நம்முடைய வாழ்வில் எந்த நீதிக்காக பசி தாகம் கொள்ள வேண்டும்?**
    - தனிப்பட்ட பரிசுத்தத்திற்காக
        - நம் வாழ்வு தேவனுக்குப் பிரியமாக இருக்க வேண்டும்.
        - “நான் பரிசுத்தர், ஆகையால் நீங்கள் பரிசுத்தராயிருங்கள்.”
    - சமூக நீதிக்காக
        - அநீதி, ஒடுக்குமுறை, பொய், ஊழல் ஆகியவற்றுக்கு எதிராக நிற்க வேண்டும். “நீதி நதிபோல் பெருகட்டும்.”
    - தேவனுடைய ராஜ்யத்தின் நீதிக்காக
        - தேவனுடைய சித்தம் பூமியில் நிறைவேற வேண்டும்.

2. **நீதிக்காக பசி தாகம் கொண்டவர்கள்**
    - தாவீது - தவறினாலும் நீதிக்காக ஏங்கினார்.
      “தேவனே, சுத்த இருதயத்தை என்னில் உண்டாக்கும்.”
    - தானியேல் - அந்நிய தேசத்திலும் நீதியை விட்டுக்கொடுக்கவில்லை.
    - பவுல் - கிறிஸ்துவின் நீதியைப் பெற எல்லாவற்றையும் இழப்பாக எண்ணினார்.

3. **நீதி வாழ்வு எப்போது நம்முடைய வாழ்வில் வருகின்றது**
    - தேவனுடைய வார்த்தையை தியானிப்பதன் மூலம்
      வேதாகமம் நம் உள்ளத்தில் நீதிக்கான ஏக்கத்தை உருவாக்கும்.
    - பரிசுத்த ஆவியின் செயலால்
      அவர் நம்மை பாவத்தை உணரச் செய்கிறார்.
    - ஜெப வாழ்க்கையின் மூலம்
      ஜெபம் நீதிக்கான பசியை ஆழப்படுத்தும்.
    - பரிசுத்தர்களின் கூட்டுறவு
      நல்ல சகவாசம் நீதியில் வளரச் செய்கிறது.

உடலுக்கு உணவு தேவைப்படுவது போல, ஆத்துமாவிற்கு நீதி தேவைப்படுகிறது. இந்த உலகம் தரும் இன்பங்கள் தற்காலிகம். ஆனால் தேவனுடைய நீதி நித்திய திருப்தியைத் தருகிறது.

இன்று ஆண்டவர் உங்களை அழைக்கிறார்: “உலகத்தின் பொருட்களுக்கு அல்ல, என் நீதிக்காக பசி தாகம் கொள்ளுங்கள்.”

அப்படிச் செய்பவர்கள் வெறுமையாய் திரும்பமாட்டார்கள். ஆண்டவர் அவர்களை நிறைவாய் நிரப்புவார்.

நீதிக்காக பசி தாகம் கொள்ளும் வாழ்க்கை என்பது:

- தேவனைத் தேடும் வாழ்க்கை
- பரிசுத்தத்தை விரும்பும் வாழ்க்கை
- நியாயத்தை நிலைநிறுத்தும் வாழ்க்கை
- திருப்தியை அனுபவிக்கும் வாழ்க்கை

ஆகையால், **“நீதிக்காக பசி தாகமாயிருங்கள், நீங்கள் திருப்தியடைவீர்கள்.”** ஆமென்.

**By Mrs. P. Johnsy Jebastin**

# சின்ன சின்ன சிந்தனைகள்

## “மதிப்பும் நடத்தையும்”

ஒரு மனிதன் எவ்வாறு நடத்தப்படுகின்றானோ அவ்வாறே அந்த மனிதன் மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். வாழ்வை இயக்கும் அடிப்படை விதிகளில் இதுவும் ஒன்று!

உதாரணமாக, ஒரு மனிதன் தன்னிலே நம்பிக்கைக்குரியவனாக இல்லாதிருப்பினும், தன்னுடைய அதிகாரியால் அல்லது நண்பனால் நம்பிக்கைக்குரியவனாகக் கருதப்பட்டு, அவ்வாறே நடத்தப்படுகின்றபொழுது, காலப்போக்கில் அவன் நம்பிக்கைக்கு உரியவனாக மாற ஆரம்பிக்கின்றான். அதேபோல சுற்றி உள்ள மனிதர்களிடமிருந்து ‘முட்டாள்’, ‘அறிவில்லாத முண்டம்’ போன்ற வார்த்தைகளைக் கேட்டு வளரும் குழந்தை, அதற்கேற்ப பெற்றோரால் நடத்தப்படுகின்றபோது, நிச்சயம் தன்னிடம் அறிவு உண்டு என்றோ, அல்லது தன்னைப் புத்திசாலி என்றோ நினைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இல்லை.

எனவே மற்றவர்களை மதிப்போம். ஆனால் நாம் கொடுக்கும் மதிப்பு அவர் தற்போது எந்த நிலையில் இருக்கிறார் என்பதைப் பொறுத்து இருக்க வேண்டாம். மாறாக, அவர் எப்படிப்பட்டவராக மாற விரும்புகிறோமோ, அப்படிப்பட்டவருக்குக் கொடுக்கப்படக் கூடியதாக இருக்கட்டும்.

**ஜெ.மரிய அந்தோணி**
Compiled by - Mrs P. Johnsy

# திருமறை அறிவுப்போட்டி மே 2026

## சங்கீதம் 146-150 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26.05.2026)**

1. பூமிக்கும் வானத்திற்கும் மேலானது எது?
2. யாருடைய யோசனைகள் அழிந்து போம்?
3. கர்த்தர் யாரை கூட்டி சேர்க்கிறார்?
4. கர்த்தர் யாரை இரட்சிப்பினால் அலங்கரித்தார்?
5. யாருடைய வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி இருக்கும்?
6. கர்த்தருடைய வல்லமை எதில் விளங்கும் ?
7. தேவனை எவற்றால் கீர்த்தனம் பண்ண வேண்டும்?
8. கர்த்தர் எதை பலப்படுத்துகிறார்?
9. ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறவர் யார்?
10. கர்த்தர் எதைக் கட்டுகிறார்?

# ஏப்ரல் 2026 - சரியான விடைகள்

## சங்கீதம் 141-145 அதிகாரங்கள்

1. தாவீதை பின்தொடர்ந்தவர்கள் (142:6)
2. தாவீதின் விரல்கள் (144:1)
3. நீதிமானின் கடிந்துகொள்ளுதல் (141:5)
4. கண்ணி (142:3)
5. கர்த்தரின் மகத்துவம் (145:3)
6. தாவீது ஆவி (143:4)
7. உதடுகளின் வாசல் (141:3)
8. கர்த்தரின் ஆளுகை (145:13)
9. தாவீதின் ஆத்துமா (143:6)
10. மனுஷரின் நாட்கள் (144:4)

# திருமறை அறிவுப்போட்டி சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1 | Mrs. மினு பெர்மின் |
| 2 | Mrs. ஆட்லின் ரீனா |
| 3 | Mrs. கிளாட்சிலி பினுகுமார் |
| 4 | Mrs. ஜாஸ்மின் ஜஸ்டின் |
| 5 | Mrs. பிரதீபா ராஜேஷ் |
| 6 | Mrs. கோல்டா கேத்தரின் |
| 7 | Mrs. ரோஸ்மின் கிருபா டார்வின் |
| 8 | Mrs. சபிதா அருண் |
| 9 | Mrs. ஆன்லெட் ஜட்சன் |
| 10 | Mrs. திவ்யா சந்திர ஜோஸ் |
| 11 | Mrs. ஷெரின் ஜெபா |
| 12 | Mrs. நிஷா ஸ்டாலின் |
| 13 | Mrs. நித்தியா வின்செண்ட் |
| 14 | Mrs. பெனிஷா சிங் |
| 15 | Mrs. விஜயலதா |
| 16 | Mrs. அனிலா சதீஷ் |
| 17 | Mrs. ஷாலினி E |
| 18 | Mrs. ஜெப ஷாலு ஜெகன் |
| 19 | Mrs. லாறா சுபின் |
| 20 | Mrs. ஏஞ்ஜெலின் ஜெபசிங் |
| 21 | Mrs. சுஜிலா சோமு |
| 22 | Mrs. வயோலா ஹெப்சிபா |
| 23 | Mrs. ஷாலினி டீனா |
| 24 | Mrs. வெனினா ஸ்டாலின் |
| 25 | Mrs. மெர்லின் ஹெர்பெர்ட் சுஜின் |
| 26 | Mrs. பொம்மி ராஜன் |
| 27 | Mrs. சிந்து மேரி |

# சமூக சீர்திருத்தத்தில் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு

## தமிழ் அச்சுப் சிற்பி காட்லீப் அட்லர்

தரங்கம்பாடி மிஷனின் வரலாறு, பெரிய மிஷனரிகளின் பெயர்களால் நிரம்பியுள்ளது. ஆனால், அந்த மிஷனின் மாபெரும் சாதனைகளுக்குப் பின்னால், தங்களின் வியர்வையையும், திறமையையும் சிந்தி, மௌனமாக உழைத்த பல கைவினைஞர்களின் கதை மறைந்துள்ளது. அப்படிப்பட்ட ஒரு நாயகன்தான் காட்லீப் அட்லர். சீகன்பால்க் மொழிபெயர்த்த தமிழ் விவிலியம், ஓலைச்சுவடிகளில் முடங்கிவிடாமல், அச்சிட்ட புத்தகமாக ஆயிரக்கணக்கான மக்களின் கைகளைச் சென்றடையக் காரணமாக இருந்தவர் அவரே. அவர், தரங்கம்பாடி அச்சுப் புரட்சியின் ஒரு முக்கியத் தூணாக விளங்கினார்.

**ஜெர்மனியிலிருந்து ஒரு பயணம்**

18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தரங்கம்பாடியில் தமிழ் அச்சுக்கூடம் நிறுவப்பட்டபோது, அதை இயக்கத் திறமையான ஆட்கள் தேவைப்பட்டனர். ஜெர்மனியின் ஹாலே நகர நண்பர்கள், தமிழ் அச்சு இயந்திரத்துடன், சில திறமையான இளைஞர்களையும் இந்தியாவுக்கு அனுப்ப முடிவு செய்தனர். அவர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் காட்லீப் அட்லர். அவர், தனது 14 வயது சகோதரர் மற்றும் ஜொஹான் பெர்லின் என்பவருடன், 1713ஆம் ஆண்டு வாக்கில், ஒரு நீண்ட கடல் பயணத்தை மேற்கொண்டு, தரங்கம்பாடியை வந்தடைந்தார். அந்தப் பயணம், தமிழ் மொழியின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைக்கப் போகிறது என்பதை அவர் அப்போது அறிந்திருக்கவில்லை.

**அச்சுக்கூடத்தின் முதுகெலும்பு**

அட்லர், ஒரு சாதாரண அச்சுத் தொழிலாளராக மட்டும் இருக்கவில்லை. அவர், அச்சுக்கலையின் பல்வேறு நுட்பங்களையும் அறிந்த ஒரு மிகத் திறமையான தொழில்நுட்ப வல்லுநராக விளங்கினார்.

1. **புதிய தமிழ் எழுத்துக்களை உருவாக்கியவர்:** ஹாலேயிலிருந்து அனுப்பப்பட்ட தமிழ் அச்சு எழுத்துக்கள், அளவில் பெரியதாக இருந்தன. இதனால், புத்தகங்களை அச்சிட அதிக காகிதம் தேவைப்பட்டது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, அட்லர், சிறிய அளவிலான, அழகான தமிழ் அச்சு எழுத்துக்களைத் தானே உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். இது அவருடைய மிக முக்கியமான பங்களிப்பாகும். அவருடைய இந்தத் திறமையால், புத்தகங்களைச் சிக்கனமாகவும், அழகாகவும் அச்சிட முடிந்தது.

2. **தொழில்நுட்ப வல்லுநர்:** அவர், அச்சு இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதிலும், பராமரிப்பதிலும் கைதேர்ந்தவராக இருந்தார். அச்சுக்கூடத்திற்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப வேலைகளையும் அவரே கவனித்துக்கொண்டார். இதனால், அச்சுப் பணி தடையில்லாமல் நடைபெற்றது.

3. **காகித ஆலையை நிறுவியவர்:** ஐரோப்பாவிலிருந்து காகிதத்தை இறக்குமதி செய்வது மிகவும் செலவானதாக இருந்தது. இந்தச் சிக்கலைத் தீர்க்க, அட்லர் ஒரு துணிச்சலான முயற்சியை மேற்கொண்டார். தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள போறையாரில், ஒரு சிறிய காகித ஆலையை (Paper-mill) அவர் நிறுவினார். ஊள்ளுர் மூலப்பொருட்களைக் கொண்டு காகிதம் தயாரிப்பதே இதன் நோக்கம். இந்தக் காகித ஆலை நீண்ட காலம் நீடிக்கவில்லை என்றாலும், இது மிஷனின் தன்னிறைவுக்கான தேடலின் ஒரு முக்கிய அடையாளமாகும்.

**அரச அங்கீகாரம்**

அட்லரின் திறமையும், சேவையும், டென்மார்க் மன்னரின் கவனத்தையும் ஈர்த்தது. மன்னர், அட்லருக்கும், அவருடன் வந்த பெர்லினுக்கும், ஒரு சிறப்புப் பாதுகாப்பு ஆணையை (Protectorium) வழங்கினார். இது, அவர்கள் மன்னரின் நேரடிப் பாதுகாப்பில் உள்ளவர்கள் என்பதையும், அவர்களின் பணிக்கு அரச அங்கீகாரம் உள்ளது என்பதையும் உறுதி செய்தது.

**முடிவுரை**

காட்லீப் அட்லர், பல ஆண்டுகள் தரங்கம்பாடியில் மௌனமாக, ஆனால் மிக முக்கியமான ஒரு பணியைச் செய்தார். அவர் ஒரு மிஷனரியாகப் பிரசங்கம் செய்யவில்லை. ஆனால், அவர் உருவாக்கிய அச்சு எழுத்துக்கள், ஆயிரக்கணக்கான பிரசங்கங்களுக்குச் சமமான தாக்கத்தை ஏற்படுத்தின. அவர், தமிழ் அச்சுக்கலையின் ஒரு முன்னோடி சிற்பி. சீகன்பால்க் வார்த்தைகளை மொழிபெயர்த்தார் என்றால், அந்த வார்த்தைகளுக்கு அச்சு வடிவம் கொடுத்து, அவைகளுக்கு உயிர் கொடுத்தவர் காட்லீப் அட்லர். அவருடைய பெயர், தமிழ் அச்சுக்கலை வரலாற்றில் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டிய ஒன்றாகும்.


**ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்:**
**மன்னா செல்வகுமார்**
**கிறிஸ்தவ மரபு ஆய்வாளர்**
**திருநெல்வேலி.**

# குறுக்கெழுத்து புதிர்

## வெளிப்படுத்தின விசேஷம் 1-8 அதிகாரங்கள்

**(சரியான விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 24.05.2026)**

வயது : 24 வயதிற்கு மேல் உள்ளவர்கள்




**மேலிருந்து கீழ்**

1. சிங்காசனத்தை சுற்றியிருந்த நான்காம் ஜீவன் எதற்கு ஒப்பாயிருந்தது?
2. யோவான் ஆவிக்குள்ளான இடம் எது?

**கீழிலிருந்து மேல்**

3. ஆறாம் முத்திரையை உடைத்தபோது சந்திரன் எதைப்போலானது எது?
4. பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய பொற்கலசங்களில் நிறைந்திருந்தது எது?

**வலமிருந்து இடம்**

5. பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொண்ட சபை எது?
6. எட்டியென்று பெயரிடப்பட்டது எது?
7. ஆசியாவிலுள்ள சபைகள் எத்தனை?

**இடமிருந்து வலம்**

8. எபேசு சபை எந்த மதஸ்தரின் கிரியைகளை வெறுத்தது?
9. வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரை தொழுதுகொண்ட மூப்பர்கள் எத்தனை பேர்?
10. யேசபேலின் போதகத்தையுடைய சபை எது?

(குறுக்கெழுத்து புதிர் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்திற்குள் நிரப்பி தரவும்.)

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடைகள் (அப்போ. 21-28)

| **மேலிருந்து கீழ்** | | **கீழிருந்து மேல்** | |
|---|---|---|---|
| 1 | அகிரிப்பா (26:1) | 4 | தெர்த்துல்லு (24:5) |
| 2 | பணம (24:26) | 5 | பேலிக்ஸ் (24:3) |
| 3 | புபிலியு (28:7) | | |
| **வலமிருந்து இடம்** | | **இடமிருந்து வலம்** | |
| 6 | எபிரெயு (21:40) | 9 | விரியன் பாம்பு (28:3) |
| 7 | கிலவுதியுலீசியா (23:26) | 10 | யூரோக்கிலிதான் (27:14) |
| 8 | மிதுனம (28:11) | | |

## குறுக்கெழுத்து புதிர் சரியான விடை எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | Nisha Stalin | 13 | Shalini E |
| 2 | Anlet Judson | 14 | Jeba Shalu Jegan |
| 3 | Gladsily Binukumar | 15 | Angelin Jebasingh |
| 4 | Rosemine Kiruba Darwin | 16 | Nithya Vincent |
| 5 | Pradeepa Rajesh. T. | 17 | Shalini Teenu |
| 6 | Golda Catherene | 18 | Merlin Herbert Sujin |
| 7 | Sherin Jeba R. | 19 | Divya Jose |
| 8 | Venina Stalin | 20 | Lara Subin |
| 9 | Sabitha Arun | 21 | Sindhu Mary |
| 10 | Minu Bermin | 22 | Viola Hepsibha |
| 11 | Benisha Singh | 23 | Vijaya Latha |
| 12 | Anila Satheesh | | |

# KIDS STORY TIME

## “Dedication”

Dear Children,

Greetings to all in the name of our lord and saviour Jesus Christ.

One evening, there was a power cut in a village. Everything became dark. A little girl named Anna quickly found a small oil lamp. She cleaned it, filled it with oil, and lit it.

Her mother said, “It’s only a small lamp. Can it really help?” Anna smiled and replied, “Even a small light can shine brightly in the darkness.”

Soon, neighbors came to their house to borrow light. The little lamp helped many people until the electricity returned. Anna said, “I want to be like this lamp always ready to serve God and help others.”

Just as the lamp was dedicated to giving light, we should dedicate our lives to God and shine for Him wherever we are.

Bible Verse: “Let your light shine before others.” – Matthew 5:16

**Moral:** When we dedicate our lives to God, even small acts of kindness can bring great light to the world.

**Miss. D.J. Godlin**

# YOUTH SERMON

## From Complaining to Contentment

Dear teenagers
Once again I greet you all  in the name of our lord and saviour Jesus Christ.

Key Verse
"Do everything without grumbling or arguing." – Philippians 2:14

**Introduction**
Complaining has become a common habit in today's world. We complain about school, family, friends, work, weather, and even small inconveniences. For many young people, complaining can seem normal. But God's Word calls us to a higher standard. He desires that we live with gratitude, trust, and joy.

Complaining is not just about words; it reflects the condition of our hearts. A complaining spirit often reveals dissatisfaction, impatience, and lack of trust in God. On the other hand, a thankful heart reflects faith, maturity, and spiritual strength.

**1. Why Do People Complain?**

- Complaining often arises from unmet expectations.
- It can come from comparison with others.
- Sometimes it reveals a lack of trust in God's plan.
- It may also stem from impatience during difficult seasons.

The Israelites repeatedly complained in the wilderness, even after witnessing God's miracles (Exodus 16:2-3). Their complaints showed that they had forgotten God's faithfulness.

**2. The Danger of Complaining**

A. Complaining dishonors God
When we complain, we question God's wisdom, timing, and provision.

B. Complaining affects others
Negativity spreads quickly. One complaining person can discourage an entire group.
C. Complaining robs us of joy
It blinds us to God's blessings and keeps us focused on problems.

**3. Biblical Examples**

Negative Example: The Israelites
Despite God's miracles, they murmured constantly. Their complaints delayed their blessings.
Positive Example: Paul and Silas
Even in prison, they prayed and sang praises to God (Acts 16:25). Instead of complaining, they worshiped.

**4. How to Overcome Complaining**

A. Practice Gratitude
Count your blessings daily.
B. Trust God's Plan
Remember that God's ways are higher than ours.
C. Speak Words of Faith
Replace complaints with praise and encouragement.
D. Pray Instead of Complaining
Turn every frustration into a prayer.

**5. The Blessings of a Thankful Heart**

- Peace in difficult times
- Joy that circumstances cannot steal
- A positive influence on others
- A deeper relationship with God

**Conclusion**

As young believers, we are called to shine in a world filled with negativity. When we choose gratitude over grumbling, we reflect Christ to others. Let us commit today to be young people who trust God, speak life, and live with thankful hearts.

**Mr. Edwin, Chennai.**

# Streams for the soul

## Meet the Greatest Giver

“Blessed is the one who cares for the poor” (Psalm 41:1).

August Hermann Francke was a well-known preacher. He started an orphanage in Halle and trusted God completely to provide everything it needed.

One day, a poor widow came to him and asked for one gold coin. At that time, Francke himself was facing financial difficulties. Even so, he felt compassion for her and gave her the coin she needed.

A few days later, he received a heartfelt letter from the widow. She thanked him and said that she was praying earnestly for the orphanage.

On the very day that letter arrived, Francke received four gold coins from two different sources. Soon after, a stranger came and donated twenty-five more coins. That same evening, he learned that a prince had left five hundred gold coins to the orphanage in his will. What a wonderful reminder! When we help those in need, we are lending to the Lord. And God, in His faithfulness, blesses and provides for those who give generously.

“He who is kind to the poor lends to the Lord, and He will reward him for what he has done” (Proverbs 19:17).

Compiled by **D.J. Godlin**

# இறை பிரசன்னத்தில் !

***எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். 1 தீமோத் 2:1***

- உலக சமாதானத்திற்காக. வன்முறைகள், தீவிரவாதங்கள் ஒழிய ....
- தற்போதைய உலகத்தில் நடக்கின்ற யுத்தங்கள் மாற ஆண்டவரின் பாதத்தில் மன்றாடுவோம்.
- இயற்கையின் நல் பாதுகாப்பு பாதுகாப்பிற்காகவும் பராமரிப்புக்காகவும்
- அனுதின பிரயாணங்களை மேற்கொள்ளுவதற்காக ........
- உலக திருச்சபைகளுக்காகவும் இந்திய திருச்சபைகளுக்காகவும் மன்றாடுவோம்.
- தென்னிந்திய திருச்சபைக்காகவும் அதன் அனைத்து பேராயர்கள் மற்றும் அவர்களது திருப்பணிகளுக்காகவும் வேண்டுதல் செய்வோம்.
- நமது திருச்சபைக்காகவும் அதன் ஊழியங்களுக்காகவும் மற்றும் ஜூனியர் சர்ச் பெண்களுக்குச் சங்கம் ஆகியவற்றிற்காகவும் ஆண்டவரின் சமூகத்தில் மன்றாடுவோம்.
- நம்முடைய திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்காக மன்றாடுவோம் குறிப்பாக அவர் தங்கியிருக்கின்ற முகாம்கள் மற்றும் இடங்களில் ஆண்டவருடைய பாதுகாப்பு எப்பொழுதும் அவர்களோடு இருக்க மன்றாடுவோம்.
- கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் அனைத்து ஊழியங்களுக்காக மற்றும் அருள்பணியாளர்களின் பாதுகாப்புக்காக மன்றாடுவோம்.
- இந்திய தேசத்திற்காகவும் நாம் வாழும் UAE தேசத்திற்காகவும் அதன் தலைவர்களுக்காகவும் .....
- திருமணம் ஆகி புத்திர பாக்கியங்களுக்கு காத்திருப்போர்களுக்காக, கர்ப்ப ஸ்திரீகளுக்காக .....
- கடன் மற்றும் குடும்ப பிரச்சினைகள் பாதிக்கப்பட்டுருக்காக ......
- பலதரப்பட்ட பலவீனங்களால் பாதிக்கப்பட்டவர்களக்காக ......
- முதிர் வயதினரின் பாதுகாப்பிற்காக அவருடைய சுகத்திற்காக ......
- புதிய வேலை வாய்ப்புகளை எதிர்நோக்கி காத்திருப்பவர்களுக்காக ....
- வேலைகளில் உயர்வை எதிர்பார்த்து இருப்பவர்களுக்காக ......
- உழைக்கின்ற மக்களுக்காக மன்றாடுவோம் உழைப்புக்கேற்ற வருமானங்களை அவர்கள் பெறவும் ஆண்டவருடைய இறையருளும் பாதுகாப்பும் அவருடைய பணிகளில் இருக்க வேண்டுவோம் .......
- நம்முடைய திருச்சபையில் இருக்கும் மருத்துவர்களுக்காக செவிலியர்களுக்காக ஆண்டவரை சமூகத்திலே மன்றாடுவோம் ....
- இப்புதிய மாதத்தில் கர்த்தருடைய வழி நடத்துவதற்காக இறைவனிடம் வேண்டுவோம்.

# சிறுவர் பகுதி...

# COLOUR THE PICTURE

(Age 3-9 years)



# CHILDREN'S QUIZ CORNER

## Psalms: Chapters 146-150

(Age 10-18 years)

**1. With what does Psalm 146 begin and end ?**
A. The Lord is good
B. Shout to the Lord
C. Praise the Lord
D. Give thanks to the Lord

**2. Who is blessed ?**
A. Those who trust in the Lord their God
B. Those who praise the Lord their God
C. Those who keep God's commands
D. Those who hope in the Lord their God

**3.What does the Lord do to the ways of the wicked ?**
A. Destroys them
B. Confuses them
C. Leads them astray
D. Frustrates them

**4. How should we physically praise the Lord ?**
A. Clapping our hands
B. Raising our hands
C. Dancing
D. Shouting

**5. Who does the Psalmist invoke to praise the Lord ?**
A. All his people
B. All his angels
C. All his chosen ones
D. All the nations of the earth

**6. What decree did the Lord make after creating the sun, moon, stars.?**
A. That they should shine on the earth
B. That they will praise the Lord
C. That they will follow the course the Lord has set for them
D. That they will never pass away

**7. All of the following people are invoked to praise the Lord EXCEPT ?**
A. Young women
B. Children
C. Fathers
D. Old men

**8. What does the Lord build up ?**
A. Zion
B. Israel
C. Jerusalem
D. His people

**9. What do other nations not know ?**
A. The Lord's anointing
B. The Lord's laws
C. The Lord's compassion
D. The Lord is king

**10. What does the Lord do to the wicked ?**
A. He throws them into the pit
B. He casts them to the ground
C. He brings back the evil they plotted on them
D. He despises them
B. He casts them to the ground

## Children’s Quiz Corner - April 2026 Answers

### Psalms 141-145

| | |
|---|---|
| 1 | Make them smoke (144:5) |
| 2 | The righteous (142:7) |
| 3 | Evildoers (141:4) |
| 4 | Praise (145:3) |
| 5 | His enemies (143:9) |
| 6 | You are my refuge (142:5) |
| 7 | Victory (144:10) |
| 8 | All his works (145:10) |
| 9 | At the mouth of the grave (141:7) |
| 10 | Judgment (143:2) |

# சிறுவர் பகுதி போட்டியில் பங்கேற்றோர்

## Childrens Quiz Corner

| | | | |
|---|---|---|---|
| 1 | B. Timothy Bermin | 12 | Steve Adrian |
| 2 | Aafreen B. Baron | 13 | Jefna John |
| 3 | Aashi B Buena | 14 | Berniha Stalin |
| 4 | J.J. Jafflin | 15 | S. Johan |
| 5 | J.J. Jeffin | 16 | Ziyola Linzia |
| 6 | Carlin Jonathan P | 17 | Akshel Hans A.S. |
| 7 | K. Jovan Fedrick | 18 | Remiro R.P |
| 8 | K. Ferona Katie | 19 | Remijo R.P |
| 9 | Johan Judson | 20 | Joshan Sujin |
| 10 | Dallin Bryant | 21 | Stebin Linto |
| 11 | S. Bertina | 22 | Arshit H. |

## Coloring

| | | | |
|---|---|---|---|
| 1 | Chris Bermin | 11 | Shiona Binara |
| 2 | S. Bertina Stalin | 12 | J.S. Kaariga Jeshal |
| 3 | R.P. Evalyn Reeba | 13 | Jaffrin Hayra |
| 4 | Jaran Judson | 14 | D.J. David Gamaliel |
| 5 | C. Jaffrin Hannah | 15 | Ellen Deborah |
| 6 | R.P. Samuel Raj | 16 | Erin Deborah |
| 7 | Sherah | 17 | Serafina Stalin |
| 8 | J.S. Kaariga Jeshal | 18 | Ann Thejas A. |
| 9 | Bertina | 19 | Keerthana |
| 10 | V.M. Arika | | |

# மருத்துவப்பகுதி

## தலைவலி – வகைகள் & காரணம் – தீர்வு

தலைவலி என்பது பெரும் வேதனை. அவை நமது அன்றாட வாழ்க்கையை வெகுவாக பாதிக்கக் கூடும். தலைவலியில் பல்வேறு வகைகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரிய தனித்துவமான அறிகுறிகளும் காரணங்களும் உண்டு.

தலைவலியின் வகைகள், காரணங்கள், நோயறிதல் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து தெரிந்து கொள்வது அவசியம்.

டென்ஷன் (TENSION) (பதற்றத் தலைவலிகள்): இவை பொதுவான தலைவலியாகும். பெரும்பாலும் பெண்களுக்கும் வயது குறைந்தவர்களுக்கும் வரும். கழுத்து மற்றும் பின்தலையில் ஏற்படும் பதற்றம், கவலை அல்லது தசை இறுக்கம் ஆகியவற்றால் இவை ஏற்படுகின்றன.

சிந்திக்கும்பொழுதும் அல்லது வேலைப் பளு இருக்கும்போதும் இது அதிகமாகும். வலியைத் தவிர கோபம் அதிகமாக வரும். இதற்கு கவுன்சிலிங் அவசியம். அதிகம் வலி உள்ளவர்களுக்கு வலி நிவாரணி மாத்திரைகளை எடுத்துக் கொண்டால் சரியாகும்.

**உயர் குருதி அழுத்தம் (HYPER TENSION)** : தலைவலிக்கு முக்கியமான காரணம், உயர் குருதி அழுத்தம். குருதி அழுத்தம் சிறிது சிறிதாக அதிகமானால் மருத்துவப் பயனாளிகள் தலைவலியை அதிகமாக உணருகின்றனர். இதற்கு மருந்துக் கடைகளில் தலைவலி மாத்திரைகளை வாங்கி உபயோகப்படுத்துகின்றனர். வலியும் குறைகிறது. நடுத்தர வயது உள்ளவர்களுக்கு இது மிகவும் அதிகமாக காணப்படுகிறது.

**பரம்பரை நோய்:** உடல் பருமனாக இருப்பவர்களுக்கு குருதி அழுத்தம் வர சாத்தியக் கூறுகள் அதிகம். குருதி அழுத்தம் பரம்பரை நோய். பெற்றோருக்கு குருதி அழுத்தம் இருந்தால் அவர்கள் குழந்தைகளுக்கும் குருதி அழுத்தம் வர வாய்ப்பு இருக்கும்.

குருதி அழுத்தம் உள்ளவர்கள்: உணவில் உப்பை பாதிதான் சேர்க்க வேண்டும். நொறுக்குத் தீனி சாப்பிடக் கூடாது. கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். குருதி அழுத்தத்தை கட்டுப்பாடிற்குள் வைத்துக் கொள்ள சிறந்த மருந்துகள் இருக்கின்றன. மருத்துவப் பயனாளிகளின் வயதைப் பொறுத்து மருந்துகள், மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

குருதி அழுத்தத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திராத பட்சத்தில் மூளையில் குருதிக் குழாய் அடைப்பு ஏற்பட்டு, மூளையில் குருதிக் குழாய் வெடித்து பக்கவாத நோய் ஏற்பட வாய்ப்புண்டு. பெரும்பாலும் குருதி அழுத்த நோய் உள்ளவர்கள் வாழ்நாள் முழுவதும் மாத்திரை சாப்பிட வேண்டும்.

**ஒற்றைத் தலைவலி (MIGRAINE)** : ஒற்றைத் தலைவலி தாங்க முடியாத வேதனையையும் உடலை செயலிழக்கச் செய்யும் தன்மையுடைய ஒருவகை தலைவலி ஆகும். இந்த ஒற்றைத் தலைவலி 6, 7 வகைப்படும். இதில் மிகவும் அதிகமாக காணப்படக்கூடிய ஒற்றைத் தலைவலி என்பது கிளாசிகல் மைக்ரன் (Classical Migraine) என்று அழைக்கும் வகையாகும். இது பெரும்பாலும் பெண்களுக்கு வரும். 20 வயதில் தொடங்கி 50 வயதில் சரியாகிவிடும். இந்தத் தலைவலியானது பெரும்பாலும் தலையில் ஒரு பகுதியில் வரும். வலது அல்லது இடது தலையில் வரக்கூடும். இது ஆரம்பித்து ஒரு சில மணி நேரத்தில் வலியின் வீரியம் அதிகமாகும். அப்போது கோபம், எரிச்சல் அதிகமாக வரும். வெளிச்சத்தைப் பார்த்தால் கண்கள் கூசும். சப்தம் கேட்டால் வலி அதிகமாகிவிடும்.

தலைவலி உச்சத்தை அடையும்போது கண்டிப்பாக வாந்தி வரும். வாந்தி வந்தவுடன் தலைவலி குறைந்து விடும். சிலருக்கு இது மாதத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை வரும். இந்த மருத்துவப் பயனாளிகளுக்கு தலைவலி வரும்போதே ஒற்றைத் தலைவலிதான் என்று தெரியும்.மாதம் ஒருமுறை, இருமுறை தலைவலி வருபவர்களுக்கு தொடர் வைத்தியம் தேவை இல்லை.

அடிக்கடி தலைவலி வருபவர்களுக்குத் தொடர்ந்து 2 அல்லது 3 மாதங்கள் மாத்திரை சாப்பிட வேண்டியது இருக்கும். சில உணவுப்பொருட்கள், சாக்லேட், சாக்லேட் சேர்க்கப்பட்டு இருக்கும் குளிர் பானங்கள்,

அய்ஸ்கிரீம், பாலாடைக் கட்டி சேர்க்கப்பட்டு இருக்கும் உணவு, பர்க்கர், பீஸ்ஸா (ீணைணய), பதப்படுத்தப்பட்ட உணவுகள், சிப்ஸ் போன்றவை சாப்பிட்டால் இந்த மருத்துவப் பயனாளிகளுக்கு தலைவலி உடனே வர வாய்ப்புள்ளது. இதை மருத்துவர்கள் மருத்துவப் பயனாளிகளிடம் கேட்டு அறிந்து அறிவுரை கூறித் தவிர்க்க சொல்ல வேண்டும்.

**Cluster Headache** : இது ஒரு வகையான தலைவலி நோய். இது ஆண்டுக்கு 2 அல்லது 3 முறைதான் வரும். இது வரும்போது சுமார் 10 நாள், 15 நாள் நீடிக்கும். இந்தத் தலைவலியானது கண் சிவத்தல், மூக்கு அடைத்தல், மூக்கில் தண்ணீர் வருவது இவற்றுடன் சேர்ந்து வரும். இதற்கும் உணவுப் பழக்கத்துக்கும் சம்பந்தம் கிடையாது. பெரும்பாலும் இந்தத் தலைவலி ஆண்டுக்காண்டு அதே மாதத்தில்தான் வரும். இதற்கு சரியான மருந்து கொடுத்தால் நிவாரணம் கிடைக்கும்.

**கிளாக்கோமா (Claucoma):** கிளாக்கோமா என்பது கண்ணிற்குள் அழுத்தம் அதிகமாக ஏற்படும் நோயாகும். இந்த நோய் மிகவும் முக்கியமான தலைவலி நோயாகும். பெரும்பாலும் மருத்துவர்கள் இதை உடனடியாக கண்டுபிடிப்பது இல்லை. கிளாக்கோமாவினால் வரக்கூடிய தலைவலி கண்களைக் சுற்றி இருக்கும் கிளாக்கோமா இரு வகைப்படும். 1. ழிநபெ யுபெடந ஊடயரஉழஅய, 2. ஊடழளநன யுபெடந ஊடயரஉழஅய. இதில் ஊடழளநன யுபெடந ஊடயரஉழஅய அறுவை சிகிச்சை மூலமாக குணப்படுத்த முடியும். கிளாக்கோமா வியாதி பரம்பரை வியாதி. இந்த வியாதி இருப்பவர்களின் குழந்தைகளுக்கும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

கிளாக்கோமா வியாதி பக்கவாட்டில் இருந்து பார்வையைக் குறைப்பதால் பார்வை முழுவதையும் இழக்கும் வரை மருத்துவப் பயனாளிகளால் கண்டுபிடிக்க முடியாது. இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் சில சிறப்பு கண் பரிசோதனை 6 மாதத்துக்கு ஒருமுறை வாழ்நாள் முழுக்க செய்து கொள்ள வேண்டும்.

மேலும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் கண்களுக்கு சொட்டு மருந்து போட்டுக் கொள்ள வேண்டும். கிளாக்கோமா மருத்துவப் பயனாளிகள் ஒன்று அல்லது 2 கண்களையும் பாதிக்கும்.

சைனசைடிஸ் (Sinusitis) : சைனசைடிஸ் தலைவலி உள்ளவர்கள் ''எனக்கு சைனஸ் இருக்கு'' என்று சொல்லக் கேள்விப்பட்டு இருக்கிறோம். சைனஸ் என்பது தலையில் உள்ள எலும்புகளில் பாரம் அதிகம் ஆகாமல் இருப்பதற்காக காற்று உள்ள பகுதியாகும்.

சைனஸ் அனைவருக்கும் இருக்கும் இந்த சைனசில் தொற்று ஏற்பட்டால் அதற்கு பெயர் சைனஸ் சைனசைடிஸ் (Sinusitis) மருத்துவப் பயனாளிகளுக்குப் பெரும்பாலும் முகத்தில்தான் வலி இருக்கும். இந்த வலியானது ஆவி பிடித்தால் குறையும். இவர்களுக்கு அடிக்கடி சளி பிடிக்கும்.

இந்த தலைவலியானது தலையை கீழே கவிழ்த்தால் பாரம் அதிகமாக இருக்கும். பெரும்பாலானவர்களுக்கு இது மாத்திரை மருந்துகளில் குணமாகிவிடும். ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

**மூளையில் கட்டி:** தலைவலிகளிலேயே மிகவும் அபாயகரமானது மூளையில் கட்டிகளால் வரக்கூடிய தலைவலியே ஆகும். ஏனென்றால் ஆரம்ப காலக் கட்டத்தில் மற்ற சாதாரண தலைவலி மாத்திரைகளுக்கே கட்டுப்படும். அதனால் மருத்துவப் பயனாளிகள் அலட்சியமாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம். இவ்வகையான தலைவலிகளுக்கு சில அறிகுறிகள் உள்ளன.

**நெற்றிப்பொட்டில் வலி:** காலையில் எழுந்தவுடன் நெற்றிப் பொட்டில் அதிக வலி இருக்கும். வாந்தி வரும். வாந்தி எடுத்தவுடன் தலைவலி குறையும். தலைவலி மிகவும் அதிகமாகும் தருணத்தில் கண் பார்வை மங்குவதற்கான வாய்ப்புண்டு. இம்மாதிரியான மருத்துவப் பயனாளிகளுக்கு கூடுதலாக கீழ்க்கண்ட சில அறிகுறிகள் இருக்கலாம்.

1.வலிப்பு நோய். 2.கண்பார்வை மங்குதல். 3.காது சரியாக கேட்காமல் இருப்பது. 4. நடந்தால் தடுமாற்றம் ஏற்படுவது. 5. கை, கால்களில் பலம் குறைவாக இருப்பது. சொரணை குறைவாக இருப்பது போன்ற அறிகுறிகள் இருக்கலாம்.

இந்த மருத்துவப் பயனாளிகளை அவசரமாக சி.டி. ஸ்கேன் எடுத்து வைத்தியம் செய்ய வேண்டும்.

**திருமதி. சபிதா அருண்குமார்**

Jaffrin Hannah

## சிறுவர் பகுதி...

# COLOUR THE PICTURE

(Age 3-9 years)






Jaffrin Hannah



## 2026 ஆராதனை ஒழுங்குகள்

இடம்: Hall No. 10 - Union Church

**ஞாயிறு ஆராதனை**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 6:30 மணி

**தூய நற்கருணை ஆராதனை**
மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**உபவாச ஜெபக் கூடுகை**
மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை
காலை 11:00 மணி

**வீட்டு ஜெபக் கூடுகை**
மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை
இரவு 7:00 மணி

**துதி ஆராதனை**
மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**பாடல் ஆராதனை**
மாதத்தின் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை
காலை 6:30 மணி

**திருமறைப் பள்ளி வகுப்பு**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்
காலை 7:00 மணி

**பெண்கள் ஐக்கிய சங்கம்**
இரண்டு மற்றும் நான்காம்
ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி

**பாடகர் குழு பயிற்சி**
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணி

**ஜெப கூடுகை**
ஒவ்வொரு புதன்கிழமையும்
இரவு 8:00 மணி


**SHARJAH TAMIL CONGREGATION** (CSI KANYAKUMARI DIOCESE)

P.O. BOX : 36378, Sharjah, U.A.E. TEL. : 06-5680727, Mobile : 050-936 7576